**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 99/2022**

**வாதி தரப்பு சாட்சி-1 மருதை - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 26.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) பொன்னன், வள்ளியம்மை தகப்பனார் பெயர் தங்கன் ஆகும். மேற்படி தங்கனுக்கு பொன்னன், வள்ளியம்மையைத் தவிர வேறு வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் இல்லை. தங்கனுக்கு அஞ்சலை, ஆறுமுகம் என்ற இரண்டு வாரிசுகள் இருக்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அஞ்சலை மற்றும் ஆறுமுகம் வாரிசுகள் இருக்கும் போது பொன்னன், வள்ளியம்மையிடம் மட்டும் எவ்வாறு கிரையம் பெற்றேன் என்றால் அவர்கள்தான் வாரிசு, அவர்களுக்கு தங்கன் உயில் எழுதி வைத்திருந்தார், அதன் அடிப்படையில் கிரையம் வாங்கினேன். அந்த உயில் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை தவிர நான் பொன்னன், வள்ளியம்மையிடம் இருந்து வேறு சொத்துக்கள் கிரையம் வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை. எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் குறிப்பிட்டுள்ள மேல்முறையீட்டு வழக்கு எண் 25/95 ல் தீர்ப்பு நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த வழக்கு நடந்த விபரம் எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பை எதிர்த்து பிரதிவாதிகள் மதுரை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

2) மேற்படி மேல்முறையீட்டில் தடை உத்தரவு பெற்றுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரையம் பெற்றது நன்செய் நிலமா புன்செய் நிலமா என்றால் புன்செய் நிலம். நான் இவ்வழக்கில் சொல்லியுள்ள 15.06.2022 ம் தேதியிட்ட சம்பவமானது தாவா 1ம் அயிட்ட சொத்தில் நடந்ததா அல்லது 2 ம் அயிட்ட சொத்தில் நடந்ததா என்றால் இரண்டிற்கும் சேர்த்துதான் நடந்தது. நான் இவ்வழக்கு தாக்கல் செய்தபோது வள்ளியம்மை உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. பிரதிவாதிகள் என்னிடம் பிரச்சினை செய்தது சம்பந்தமாக பொன்னனிடம் கேட்டேனா என்றால் இல்லை. நான் நிலத்தை கிரையம் பெற்ற பின்னிட்டு 22 வருடங்களாக உழவடை செய்தேனா என்றால் செய்து வந்தேன். 22 வருடங்களாக பிரதிவாதிகள் என்னிடம் பிரச்சினைக்கு வரவில்லையா என்றால் இல்லை. கடந்த 22 வருடங்களாக நான் வண்டிப்பாதைக்கு தெற்குபுறம் உள்ள 1 ஏக்கர் 10 செண்ட் இடத்தில் மட்டும் உழவடை செய்ததால் பிரதிவாதிகள் பிரச்சினை செய்யவில்லை என்றும், 15.06.2022 அன்று வண்டிப்பாதைக்கு வடபுறம் உள்ள 30 செண்ட் இடத்தில் உழவடை

செய்ய முயற்சித்ததால்தான் பிரதிவாதிகள் பிரச்சினை செய்தார்கள் என்றால் சரியல்ல, 30 செண்ட் இடத்தையும் நான் 22 வருடங்களாக விவசாயம் செய்து கொண்டுதான் இருக்கிறேன்.

3) சங்கனுக்கு 30 செண்ட் இடம் எவ்வாறு பாத்தியம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. சங்கன் பெயரில் உள்ள ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற 30 செண்ட் இடம் சங்கனுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும், அந்த இடம் சம்பந்தமாக பிரதிவாதிகள் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீடும், அதில் பெறப்பட்ட தடை உத்தரவும் தெரிந்தே நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்த இடைக்கால தடை உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**